அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில் – மடப்புரம் – திருப்புவனம் வட்டம் சிவகங்கை மாவட்டம்.

மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (ஆறாம் அழைப்பு)

ந.க.எண்:3/2021/அ2 நாள்: 22.03.2022.

மறுபொதுஏலம்/மறுஒப்பநதப்புள்ளி நாள் : 07.04.2022.
இடம் : திருக்கோயில் ஓம்சக்தி மண்டபம்.
நேரம் : முற்பகல் 11.00 மணி.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிமங்கள் பசலி1431க்கு (08.04.2022 முதல் 30.06.2022 முடிய) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வருகின்ற 07.04.2022 முற்பகல் 11.00 மணியளவில் திருக்கோயில் ஓம்சக்தி மண்டபத்தில் வைத்து சிவகங்கை உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியால் மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி நடத்தப்படும்.

உரிமம் விபரம்

| வ. எண் | உரிமம் இனம் | காலம் | ஏல டெபாசிட் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பிரசாதம் தயாரித்து விற்பனை செய்யும் உரிமை | 08.04.2022முதல் 30.06.2022முடிய | 300000.00 | 300000.00 | 300.00 |

நிபந்தனைகள்

1. மறுபொதுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கேட்க விருப்பம் உள்ளவர்கள் எந்த இனத்தை மறுபொது ஏலம்/ மறுஒப்பந்தப்புள்ளி கேட்க விரும்பும் இனத்திற்குரிய ஏல டெபாசிட் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகைக்கு உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம் என்ற பெயருக்கு திருப்புவனம் வங்கியில் மாற்றும் வகையில் வங்கி வரைவேலை எடுத்து மறுபொது ஏலத்திலோ அல்லது மறுஒப்பந்தப்புள்ளியிலோ கலந்து கொள்ளலாம். ஒரு நபர் ஒரு இனத்திற்காக செலுத்திய ஏல முன்வைப்புத் தொகையை அவர் வெற்றி பெறாவிட்டால் வேறு இனத்திற்கு முன்வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படாது.

2. மறுஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் ஒப்பந்த விலைப்புள்ளி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை மற்றும் படிவம் 01.04.2022 முதல் 06.04.2022 முடிய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் உரிய இனத்தினை ஒப்பந்தப்புள்ளி கவரில் எழுதி, ஒப்பந்தப்புள்ளியில் உரிய ஒப்பந்தப்புள்ளி தொகைக்குரிய வரைவோலையுடன் இணைத்து ஒப்பந்தப்புள்ளியினை உரிய நேரத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி பெட்டிக்குள் போட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும் தொகையினை எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல், திருத்தல் இல்லாமல் எழுதி தேதியுடன் கையொப்பம் இட வேண்டும். மூடிய

முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 07.04.2022தேதி முற்பகல் 10.30 மணிக்குள் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் போட வேண்டும்.

3. முதலில் மறுபொது ஏலம் நடத்தப்படும் பொது ஏலத்தில் அதிகபட்ச தொகைக்குகேள்வி கேட்டவுடன் அதற்கு மேல் கேள்வி இல்லாத நிலையில் கேள்வி ஏலம் நிறுத்தப்பட்டு, வருகைபுரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் ஏலத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை இதில் எது அதிகபட்ச தொகையோ (உயர்ந்த கேள்வி கேட்டவருக்கு) இலாகா அதிகாரத்திற்குட்பட்டு மறுபொது ஏலம்/மறுப்பந்தப்பள்ளி முடிவு செய்யப்படும்.

4. மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி வெற்றி பெறாதவர்களின் முன்வைப்புத் தொகைக்கு ஏலம் முடிந்த பின்பு அதாவது தங்களது வரைவோலை திருக்கோயில் கணக்கில் வரவுவந்த ஒருவாரத்திற்குப் பின்னர் வட்டி ஏதுமின்றி திருக்கோயிலின் காசோலையாகத் திருப்பித்தரப்படும்.

5. மறுபொதுவாக ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி உயர்ந்த கேள்விதாரருக்கு விடப்படும். உயர்ந்த கேள்வி திருக்கோயில் மதிப்பிற்கு குறைவாக இருந்தால் மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி எவருக்கும் உறுதி செய்ய இயலாது.

6. மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி முடிவு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

7. எந்த ஒரு இனத்தையும் மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி எடுத்தவர்கள் அந்த இனத்திற்குரிய ஏலத்தொகை முழுவதையும், மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் அப்பொழுதே, அவ்விடத்திலேயே உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியிடம் வரைவோலையாகவோ, ரொக்கமாகவோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவேண்டும், தவறினால் அடுத்த கேள்விதாரருக்கு ஏலம் உறுதி செய்யப்படும். அதனால் ஏற்படும் சகலவிதமான நஷ்டங்களையும் முதல் கேள்விதாரரிடம் வசூலிப்பதுடன், டேவணித்தொகை முழுவதும் திருக்கோயிலுக்கு ஆதாயமாக வைத்துக் கொள்ளப்படும்.

8. உரிமைக் குத்தகையினை எடுப்பதற்கு 25வயதிற்கு மேற்பட்ட இந்துக்கள் மட்டுமே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

9. திருக்கோயிலுக்கு எந்த வகையிலாவது பாக்கி செலுத்த வேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்துபவர்கள் மற்றும் அவரின் உறவினர்கள், பினாமியாக திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள் மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கேட்க அனுமதிக்கமாட்டார்கள்.

10. காரணம் கூறாமல் எந்த ஒரு கேள்வியையும், நிராகரிக்கவோ அல்லது மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளியை ஒத்திவைக்கவோ உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.

11. திருக்கோயில் நன்மையை கருத்தில் கொண்டு உரிமைதாரர்களுக்கு அவ்வப்போது உத்தரவு பிறப்பிக்கவும், புகார் எதுவும் பெறப்பட்டால் அதனை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் இத்திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.

12. உரிமைத் தொகையில் எக்காரணத்தைக் கொண்டும் தள்ளுபடி எதுவும் அளிக்கப்படமாட்டாது. உரிமைதாரருக்கு இராஜீகத்தாலோ, தெய்வீகத்தாலோ, ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் கோயிலுக்கு எவ்வித பொறுப்பும்

இல்லை எந்த ஒரு இனத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உள்குத்தகைக்கு விடக்கூடாது.

13.உரிமைக்காலம் முடிந்த பின்பு சம்பந்தப்பட்ட உரிமத்தில் உரிமைதாரருக்கு பின் தொடர்ச்சியோ அல்லது உரிமையோ கிடையாது.

14.மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளியில் இறுதி முடிவு தெரிந்த அல்லது உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரியின் அறிவிப்பு கிடைத்த 7 தினங்களுக்குள் தன் சொந்தப்பொறுப்பில் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க வேண்டியது. அவ்வாறு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகுதான் சம்பந்தப்பட்ட உரிமத்தினை அனுபவிக்க உரிமையுண்டு.

15.வேறு நிபந்தனைகள் இருப்பின் அது சேர்க்கப்பட்டு மறுபொது ஏலம்/மறுஒப்பந்தபுள்ளியின் போது தெரிவிக்கப்படும். மேலும் ஏல நிபந்தனைகளில் அய்யப்பாடு ஏற்படும் பட்சத்தில் அது குறித்து கோயில் நிர்வாகிகளால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

16.மறுபொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளியில் கலந்து உரிமம் பெற்றவர்கள் விற்பனைவரி, நகராட்சிவரி, வருமான வரித்துறையினரால் கூறப்படும் வரி தம் சொந்தப் பொறுப்பில் திருக்கோயிலுக்கு செலுத்தப்படவேண்டும்.

I.பிரசாதம் விற்பனை உரிமை சிறப்பு நிபந்தனை

1. ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்.10163/2016/யு1 நாள்.07.03.2016ன்படி பிரசாத இனங்களுக்கு எடை மற்றும் விலை நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியல்படி பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும். பட்டியலில் அல்லாத பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யக்கூடாது.

திருக்கோயில் பிரசாதங்களின் சீரான விலை நிர்ணயம்

| வ. எண் | பிரசாத இனங்கள் | எடை | சீரான விலை |
|---|---|---|---|
| 1. | லட்டு | 50 கிராம் | 10.00 |
| | | 100 கிராம் | 20.00 |
| 2. | அதிரசம் | 50 கிராம் | 10.00 |
| | | 100 கிராம் | 20.00 |
| 3. | தேன்குழல் | 50 கிராம் | 10.00 |
| 4. | முறுக்கு | 50 கிராம் | 10.00 |
| 5. | சர்க்கரை பொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 6. | புளிசாதம் | 100 கிராம் | 10.00 |
| 7. | மிளகுவடை | 50 கிராம் | 10.00 |
| 8. | கற்கண்டு | 50 கிராம் | 7.50 |
| | | 100 கிராம் | 15.00 |
| 9. | பஞ்சாமிர்தம் | 500 கிராம் | 35.00 |
| 10. | வாசனை விபூதி | 50 கிராம் | 7.50 |
| | | 100 கிராம் | 15.00 |
| 11. | மஞ்சள் மற்றும் மஞ்சள் கயிறு, குங்குமம் | 1 பாக்கெட் | 10.00 |
| 12. | மிளகு தட்டை | 50 கிராம் | 10.00 |
| 13. | பேரீச்சம்பழம் | 100 கிராம் | 10.00 |
| | | 200 கிராம் | 20.00 |
| 14. | புட்டமுது | 50 கிராம் | 10.00 |
| | | 150 கிராம் | 30.00 |
| 15. | வெண்பொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 16. | தயிர்சாதம் | 100 கிராம் | 10.00 |
| 17. | மஞ்சள், குங்குமம் | 50 கிராம் | 10.00 |
| 18. | சந்தனம் | 50 கிராம் | 15.00 |

| | | | |
|---|---|---|---|
| 19. | பிரசாத செட்–1 (லட்டு–1, தேன்குழல்–1, அதிரசம்–1, கற்கண்டு பாக்கெட்–1 (50 கிராம், பேரிச்சம்பழம் பாக்கொட்–1(100 கிராம்)) | 1 பாக்கெட் | 50.00 |
| 20. | அப்பம் | 50 கிராம் | 10.00 |
| 21. | திருமாங்கல் பிரசாதம் சுவாமி படம் | | 30.00 |
| 22. | தினை மாவு | 50 கிராம் | 10.00 |
| 23. | தினை மாவு | 150 கிராம் | 25.00 |

2. ஒவ்வொரு நாளும் விற்பனை செய்யப்படும் பிரசாதங்களில் இருசெட் பிரசாதத்தை அம்மனுக்கு படைப்பதற்காகவும் அதன் தரத்தை சோதித்து அறிவதற்காகவும் திருக்கோயில் அலுவலகத்தில் இலவசமாக கொடுக்க வேண்டும்.

3. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரசாதங்களுக்கு பிரசாதம் தயாரிக்கும் நாள் **(Manufacturing Date)** மற்றும் காலாவதி **(Expire date)** தேதி விவரங்கள் பிரசாத கவரில் அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டும்.

4. சென்னை ஆணையர் ந.க.எண்.**45434/201/2** நாள்.**25.06.2021**ன்டி பிரசாதம் தயாரிக்கும் உரிமம் பெற்றவர் தன் சொந்தப் பொறுப்பில் உணவு பாதுகாப்புத் துறையில் **BHOG (Blissful Hygiene Offering to God)** தரச்சான்றிதழ் பெறப்பட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பில் பிரசாதம் தயாரிக்கும் உரிமம் பெற்றவர் தன் சொந்தப் பொறுப்பில் உணவு பாதுகாப்புத் துறையில் **(FSSAI)** பதிவு செய்து கொள்ள வேண்டும்.

6. பிரசாதத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கலப்படமில்லாததாகவும், சுகாதாரமானதாகவும், தரமானதாகவும் இருத்தல் வேண்டும். பிரசாதம் தயாரிப்பதிலோ அல்லது பொருள்களிலோ குறை ஏற்பட்டு அதனால் பக்தர்களுக்கு நலக்கேடு ஏற்படுமாயின் அதற்கு உரிமைதாரரே முழுப்பொறுப்பாளி ஆவார். நல்ல தரமான மூலப்பொருட்களைக் கொண்டு பிரசாதங்களை திருக்கோயில் ஒதுக்கித்தந்த இடத்தில்தான் தயார் செய்ய வேண்டும். வெளியில் தயாரித்த பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

7. திருக்கோயிலிலிருந்து அமைத்துத் தரும் இடத்தில் பக்தர்களுக்கு இடையூறின்றி சுகாதார முறைப்படி பொருட்களை விற்பனை செய்யப்பட வேண்டும்.

8. திருக்கோயில் நலன் கருதி பிரசாத ஸ்டாலைக் கண்காணிக்கவும், புகார் வருமாயின் விசாரிக்கவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

9. குத்தகை உரிமை பெற்றவர் சொந்தப் பொறுப்பில் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

10. உரிமம் சம்மந்தப்பட்ட வகையில் விற்பனைவரி, நகராட்சி வரி மற்றும் இதர அரசு வரிகளை அவர் சொந்தப் பொறுப்பில் செலுத்திக் கொள்ள வேண்டும்.

11. பிரசாத ஸ்டாலுக்கு பயன்படுதப்படும் மின்சாரத்திற்கு சொந்தப் பொறுப்பில் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ஓராண்டுக்கு உண்டான தொகை ரூ.12000/- ஏலத்தொகையுடன் சேர்த்து செலுத்த வேண்டும் தவறினால் மின் இணைப்புத் துண்டிக்கப்படும்.

12. தரமற்ற பதார்த்தமாக இருப்பின் அவற்றினைக் கொண்டு இருப்பில் உள்ள பதார்த்தத்தினை விற்காமல் செய்ய நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

13.ஏல அறிவிப்பில் கூறப்பட்ட பிரசாதங்களை தவிர வேறு பிராசதங்களை விற்பனை செய்யக்கூடாது. ஏல அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள எடை குறைவோ அல்லது ஏல அறிவிப்பில் கூறப்பட்டுள்ள தொகையை விட கூடுதலாகவோ விற்பனை செய்யப்பட்டால் எந்தவித முன்னறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்யப்படும்.

14.பிராசதங்கள் தயாரிக்கப் பயன்படும் தளவாடத் தட்டுமுட்டுச் சாமான்களை தன் சொந்தப் பொறுப்பில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் குறைபாடுகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

15.பிரசாதங்கள் தயாரிப்பவர் மற்றும் விற்பவர் இந்து மதத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். விற்பவர் கடையில் லுங்கி அணிந்து விற்பனை செய்யக் கூடாது.

ஜி.செல்வி பி.ஏ.,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

1. திரு.ஆ.பழனியப்பன்,
அறங்காவலர்குழுத் தலைவர்
2. திரு.ச.பாஸ்கரன், அறங்காவலர்,
3. திருமதி.சி.கமலா, அறங்காவலர்,
4. திருமதி.ப.தீபாஅமிர்தம், அறங்காவலர்,
5. திரு.ந.சண்முகவேல், அறங்காவலர்,